**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,                                                                 தேதி: 03.04.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## துணைவேந்தர் கோப்பை ஹாக்கி போட்டி 2023

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான துணைவேந்தர் கோப்பை ஹாக்கி போட்டி 31.03.2023 முதல் 02.04.2023 தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்கேற்க கோவை மாவட்ட கல்லூரிகள் மற்றும் ஹாக்கி சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பல்வேறு கல்லூரிகள் மற்றும் ஹாக்கி சங்கங்களை சேர்ந்த 17 அணிகள் பங்கேற்றன. இதில் 13 ஆண்கள் அணிகளும் 4 பெண்கள் அணிகளும் ஆர்வமுடன் பங்கேற்றனர். துவக்க விழா 31.03.2023 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் சிறப்புரையாற்றி போட்டியாளர்களை ஊக்கப்படுத்தினார். இதைத் தொடர்ந்து அனைத்து முதல்வர்களும் வாழ்த்துரை வழங்கினர். பின் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஹாக்கி சகோதரத்துவம் மற்றும் கோவை பிரசாத் ஹாக்கி சங்கம் அணிகளுக்கிடையே போட்டி துவங்கியது. இதைத் தொடர்ந்து மற்ற அணிகளுக்கு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் ஆண்களுக்கு இடையேயான போட்டியில், வனத்துறை ஹாக்கி சங்கம், கோவை முதலிடத்தையும், போத்தனூர் விளையாட்டு சங்கம் இரண்டாம் இடத்தையும் பிடித்தது. பெண்களுக்கு இடையேயான போட்டியில், பாரதியார் பல்கலைக்கழகம் முதலிடத்தையும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தையும் பிடித்தது.

நிறைவு விழா 02.04.2023 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. பேராசிரியர் முனைவர் வெங்கட் பிரபு வரவேற்புரை வழங்கினார் மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர். அ. ரவிராஜ் வாழ்த்துரை வழங்கினார். இதைத் தொடர்ந்து துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் சிறப்பரையாற்றி, வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசுகள் வழங்கினார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் ஜே.பி. தேசிக சீனிவாசன் நன்றியுரையுடன் போட்டி இனிதே நிறைவற்றது,.

**மக்கள் தொடர்பு அலுவலர்**